DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Judicial Magistrate, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 383/2020** |
| Deposition of Witness for | : | PW 7 |
| Name | : | டாக்டர்.திரு. பாலசுப்பிரமணியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 19.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 19th June 2026.

**எதிரி ஆஜரில்லை . மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்.**

(எதிரி தரப்பு எந்தவொரு ஆட்சேபனை இல்லாமல் Video Conference மூலம் பதிவு செய்யப்பட்டது)

**முதல்விசாரணை:**

நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவ மருத்துவமனை மருத்துவகல்லூரியில் துனை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். அந்த மருத்துவமனையில் 18.12.2019ம் தேதி மாலை 03.45 மணியளவில் திருநெல்வேலி மருத்துவ கல்லூரியில் உதவி பேராசிரியராக

பணிபுரிந்தபோது, 61 வயது மதிக்கத்தக்க வேலுச்சாமி என்பவருக்கு நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, AR.No.2818776, I.P.No.96558/19–ன் படிவம் x.Ray No.116822 ME–ன் படியும் சிகிச்சை செய்து 18.02.2020–ம்த தேதி மேற்படி வேல்சாமி என்பவருக்கு அளித்த சிகிச்சை விபரங்களைப் பார்வையிட்டு சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை மருத்துவ அதிகாரி அவர்களின் வேண்டுதலின்பேரில் சிக்ச்சைப்பட்டியல் வழங்கினேன். அந்த சிகிச்சை பட்டியல் **அ.சா.ஆ.5** ஆகும்.

1. இடது கையில் ஒரு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது.(ulna) அதற்கு பிளேட் மற்றும் ஸ்குரு வைத்து பொருத்தினோம்.

2. இடது கையில் 4–விரலில் ஒரு எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது(PPx) அதற்கு K wire கொண்டு அறுவை சிகிச்சை செய்தேன்.

மேற்படி 2 காயங்களை தவிற வேறு எந்த காயமும் இல்லை. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை எப்பொழுது விசாரணை செய்தார்கள் என்றால் 18.12.2019 அன்று விசாரணை செய்தார்கள். போலிசார் ் விசாணையில் x–ray report. x–ray படம், ஆகியவற்றை போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றாலும், நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவில்லை என்றாலும் என்றால் சரிதான். மேற்படி 2 காயங்களும் மது போதையில் கரடுமுரடான பாதையில் வாகனம் ஓட்டி தன்னிச்சையாக கீழே விழும்போது ஏற்படு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேற்படி நான் வழங்கிய சிகிச்சை பட்டியலில் 2 காயங்கள் குறித்து காயத்தின் வயது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

(Sd/-)M.Mari

Judicial Magistrate,

Sankarankovil.